NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* Front Page
**Date:** 28 February 2017

உயிர்மருத்துவம், நகர வளர்ச்சி, போக்குவரத்து, அறிவுசார் சொத்துரிமை

# சிங்கப்பூர்-சீனா இடையே கூட்டு உடன்படிக்கைகள்

அரசாங்கம் தலைமையிலான மூன்று கூட்டு ஒத்துழைப்பு உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளதாக சிங்கப்பூரும் சீனாவும் தெரிவித்துள்ளன. வர்த்தக விவகாரங்களை முக்கியமாகக் கொண்ட 15 ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதற்கு மறுநாளான நேற்று இந்த உடன்பாடுகள் கையெழுத்தாகி உள்ளன.

கையெழுத்திடும் சடங்கை சிங்கப்பூர் துணைப் பிரதமர் டியோ சீ ஹியனும் சீன துணை அதிபர் ஜெங் கௌலியும் பார்வையிட்டனர். இம்மூன்று உடன்பாடுகள் தவிர அறிவுசார் சொத்துரிமைப் பாதுகாப்பில் ஒத்துழைப்பு என்னும் ஓர் ஒப்பந்தமும் நேற்று ஏற்படுத்தப்பட்டது.

அரசாங்கம் ஏற்று நடத்தும் ஒத்துழைப்புத் திட்டங்களில் ‘சிப்’ என்று அழைக்கப்படும் சுசோவ் தொழிற்துறை பூங்காத் திட்டம் முதன்மையானது. இது கடந்த 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அதன் நிர்வாகக் குழு, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம், மூலக்கூறு மற்றும் உயிரணுவியல் கழகம் ஆகியன இணைந்து இணைக்கக் கடிதம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. உயிர்மருத்துவத் துறையில் ஒத்துழைப்பை வலுவாக்குவதற்கான முயற்சி அது.

அடுத்ததாக, தியான்ஜின் சுற்றுச்சூழல் நகரத் திட்டம். இதற்காக இரு அரசாங்கங்களும் கூட்டு நிபுணர் குழு ஒன்றை ஏற்படுத்த ஒத்துக்கொண்டுள்ளன.

அரசாங்க, தனியார் துறைகளைச் சேர்ந்தோருடன் கல்விக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றைச் சேர்ந்தோரும் இக்குழுவில் இருப்பர்.

யோசனைகளைப் பரிமாறிக் கொள்வதோடு நீடித்திருக்கக் கூடிய வகையில் எவ்வாறு நகர மேம்பாட்டைத் தொடருவது என்பதில் இக்குழுவினர் ஆலோசனைகளையும் மேற்கொள்வர்.

இதன் அடிப்படையில் கடந்த 2008ஆம் ஆண்டு நகரமன்ற மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடக்கம் கண்டது.

30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட அந்த இடத்தில் இப்போது 70,000 மக்கள் வசிப்பதோடு சுமார் 4,500 பதிவுபெற்ற நிறுவனங்களும் உள்ளன.

மூன்றாவது ஒத்துழைப்புத் திட்டம் சோங்குயிங் இணைப்பு நடவடிக்கை என்பதாகும்.

கடந்த 2015 நவம்பரில் அறிவிக்கப்பட்ட இந்த ஆக அண்மைய இணைப்புத் திட்டத்தில் ஐஇ சிங்கப்பூர் அமைப்பும் சோங்குயிங் நகரமன்ற நிர்வாகமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

சோங்குயிங்கின் போக்குவரத்துத் தொடர்புகளை தென்கிழக்கு ஆசியாவுக்கும் மத்திய ஆசியாவுக்கும் மேம்படுத்தும் நோக்கிலான இரு வர்த்தகத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்க இவ்வொப்பந்தம் வழி செய்கிறது.

இறுதியாக, இரு நாடுகளையும் சேர்ந்த அறிவுசார் சொத்துரிமை அமைப்புகளும் குவாங்டோங் மாநில அரசாங்கமும் கையெழுத்திட்ட ஒப்பந்தம் ஒன்று புத்தாக்கத்திறன் மிக்க நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



இருதரப்பு ஒத்துழைப்புக்கான கூட்டுமன்றக் கூட்டத்தின்போது சிங்கப்பூர் துணைப் பிரதமர் டியோ சீ ஹியனும் சீன துணை அதிபர் ஜாங் கௌலியும். **படம்: சாவ் பாவ்**

அரசாங்க ஆதரவுடன் தனியார் துறை ஏற்று நடத்தும் இத்திட்டம் குவாங்டோங் மாநிலத்தில் உயர் தொழில்நுட்பத் தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கம் கொண்டது.

இதற்கிடையே, இருதரப்பு உயர்நிலைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மூன்று நாள் சீன வருகை மேற்கொண்டுள்ள திரு டியோ சீ ஹியன் நேற்று சின்ஹுவா செய்தி நிறுவனத்திடம் பேசினார்.

ஒரே சீனா கொள்கையை சிங்கப்பூர் தொடர்ந்து பின்பற்றி வருவதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கு இடையில் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் வட்டார அமைதியில் சிங்கப்பூரும் சீனாவும் ஒத்த கருத்தைக் கொண்டு இருப்பதாக திரு டியோ கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.